1975 மார்ச் 13]

சென்னை-தேவம்பட்டு பேருந்து வழித்தடம்.

*309—வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னையிலிருந்து தேவம்பட்டு செல்லும் 90-எ பேருந்துகள் அய நல்லூர் கிராமம் வரை சென்றுவர வழித் தடம் தரப்பட்டிருந்தும், சீராக அயநல்லூர் கிராமத்திற்கு சென்று திரும்புவதில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை. சென்னைக்கும் தேவம்பட்டுக்கும் இடையே 90-எ பேருந்து வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள், அயநல்லூர் வழியே தவறாமல் சென்று வருகின்றன. அந்த வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள் சேருமிடத்தைக் காட்டும் பலகை களுள் "அயநல்லூர்" கிராமத்தின் பெயரைச் சேர்க்குமாறு கிளை நிர்வாகிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி வழங்கப்பட இருக்கிற உத்தரவுக்கு நன்றி சொல்கிற நேரத்தில், இப்போது கூட சில நேரங்களில் அந்த 2,000 மக்கள் தொகை வாழும் அயநல்லூருக்கு அந்த பஸ் செல்லாமல் இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்த பெயர் பலகை யில்—வழி அயநல்லூர்—என்று எழுதப்படுமா என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நன்றி சொன்னதற்கு நன்றி.

திருப்பூரில் பேருந்துப் பணி மனை.

*310—வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணிமனை எப் போது கட்டி முடிக்கப்படும் ?

(இ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழக பணிமனை பிப்ரவரி 1974-ல் கட்டி முடிக்கப்பட்டது.

(இ) நிலத்திற்கும் கட்டடத்திற்குமான மொத்த மதிப்பீடு ரூ. 1.27 இலட்சம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் பணி மனையில் இன்னும் நிறைய போக்குவரத்துக்களை விரிவுபடுத்தும் வாய்ப்பு இருப்பதால், கூடுதல் கட்டிடம் கட்டி, பெரிய வகையில் அந்தப் பணி மனையை—அது மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்கிறது—விரிவு படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய உத்தேசம் எது வும் இல்லை.